**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 20 /2025 PW . 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமார் | தந்தை/கணவர் பெயர்: பாக்கியராஜ் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**<u>12.02.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் வேட்டையன் பட்டியில் குடியிருந்து JCB ஆப்ரேட்ராக வேலை செய்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு பழக்கமானவர்கள். சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் தேதி , மாதம் ஞாபகமில்லை. இரவு சுமார் 08.45 மணியளவில் மணப்பட்டி பஸ் ஸ்டாப்பில் நான் , பிரகாஷ், அஜீத் ஆகியோர் நின்று கொண்டிருந்ததோம் அப்போது எதிரி சூரியபிரகாஷ் , எனது தம்பி அஜீத் கத்தியால் இடுப்பிலும், கால்களிலும் குத்தி விட்டு சென்று விட்டார் . எதிரி சூரியபிரகாஷ்க்கும், அஜீத்கும் ஏதோ பிரச்சனை இருந்திருக்கிறது அதனால் கத்தியால் குத்திவிட்டு சென்று விட்டார். அஜீத்தை நானும் , பிரகாஷ்-ம் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கியிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. அஜீத் எனது சித்தப்பா மகன் ஆவார் . சம்பவத்திற்கு பிறகு பார்த்தேனா என்றால் இல்லை அஜீத்தை குத்தும் போது பார்த்தேன் . நாங்கள் குளித்து கொண்டிருந்த SK தொட்டிருந்த இடத்திற்கும், சம்பவ இடத்திற்கும் சுமார் 50 மீட்டர் இருக்கும். 1ம் எதிரியும், அஜீத்-ம் சிறு வயதிலிருந்து நண்பர்கள் என்றால் சரிதான் . சம்பவத்திற்கு முன்பு இருவருக்கும் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை . அஜீத், பிரகாஷ், நான் ஆகியோர் ஒன்றாக தான் இருந்தோம் . வெட்டுபட்டு கிடந்த இடத்தில் காவலர்கள் ஆட்டோவில் ஏற்றி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் சொல்வது போல் நாங்கள் மூவரும் ஒரே இடத்தில் இல்லை என்றாலும் , நான்

நின்றுகொண்டிருந்த இடத்திற்கும், சம்பவ இடத்திற்கும் 200 மீட்டர் தொலைவு இருக்கும் என்றாலும் , சம்பவ நடந்த இடம் சிங்கம்புணரி –திருப்பத்தூர் ரோட்டுக்கு அருகில் உள்ள காடு என்றாலும் இரு இடத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் செங்கல் சூளை உள்ளது என்றால் சரியல்ல . நான், அஜீத் எனக்கு தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.